அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 32/89(viii)

எனது இல. iv/2/9/771(H)1/5
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,
1995, ஜனவரி மாதம் 31 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

ஓய்வூதியம் உரித்துடைய சேவைகளில் இருந்த மீள சேவையில் அமர்த்தப்படாத 1980 யுலை வேலைநிறுத்தில் பங்கேற்றியவர்களை மறுபடி சேவைக்கு அழைத்தல்

இது தொடர்பாக வெளியிடப்பட்ட 1995-01-12 ஆந் திகதிய 32/89(vii) ஆம்இலக்க அரசாங்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவு கீழ் வருமாறு திருத்தப்படுகின்றது.

" 60 வருடங்களுக்கு குறைவான வயதுடைய அலவலர்கள் மீண்டும் சேவையில் சேர்ந்து கொள்வதற்கு விரும்பினால் அவர்கள் அதற்காக 1995-02-01 முதல் 1995-02-28 வரை சேவைக்கு அறிக்கையிடலாம். அவ்வலுவலர்கள் தாம் இறுதியாகக் கடமையாற்றிய நிறுவனத்துக்கு வந்து தாங்கள் சேவையில் சேருவதற்கான தமது விருப்பை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். அலுவலர்களுடைய தனிப்பட்ட கோவையின்படி பொருத்தமான இடங்களில் அவர்களை மீளச் சேவைக்கமர்த்துவதற்காகச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் செயற்படுவதுடன் அதுபற்றி தங்கள் அமைச்சின் செயலாளர்க்கும் / நியமன அதிகாரிக்கும் அறிக்கையிட வேண்டும். சேவைக்கமர்த்தும் போது 1989-05-08 ஆந் திகதி முதல் 1995-02-01 ஆம் திகதி வரை அவர்கள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்று சேவையில் இருந்தவர்களாக கருதி குறிப்பிட்ட சம்பளத்திலும் சேவை மூப்பிலும் அமர்த்தப்பட வேண்டும். "

02. அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

ஒப்பம் / ஆர்.எஸ். ஜயரத்ன
செயலாளர்
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,